**செய்தி வெளியீடு எண்: 369** **நாள்: 24.02.2024**

செய்தி வெளியீடு

யுமாஜின் 2024 தகவல் தொழில் நுட்ப மாநாடு சென்னை வர்த்தக மையத்தில் பிப்ரவரி 23 – 24 ல் நடைபெற்றது. இம்மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் துவங்கி வைத்துத் தொடக்க விழாப் பேருரையாற்றினார். இரண்டு நாட்கள் நடந்த இந்த மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு, ஆழ் தொழில்நுட்பம், இணையப் பாதுகாப்பு, நுண்ணறிவுத் தொடர்பு, நிலைத்தன்மை, உலகளாவிய புத்தாக்க மையங்கள், AVGC – XR ஆகியவை குறித்த பொருண்மைகளில் 60க்கும் மேற்பட்ட அமர்வுகள் நடைபெற்றன. 140க்கும் மேற்பட்ட ஆளுமைகள் இத்துறைகள் குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். பல்வேறு தொழில் நுட்ப நிறுவனங்களின் 218 கண்காட்சி அரங்குகள் இடம் பெற்றன.

24 ம் தேதி நடைபெற்ற நிறைவு விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர்.பழனிவேல் தியாகராஜன், அமெரிக்காவின் Sprinkler நிறுவனத் தலைவர் திரு. ரேகி தாமஸ், மேற்கு ஆஸ்திரேலியா சுகாதார மற்றும் மனநலத்துறை அமைச்சர் திருமிகு. ஆம்பர் ஜேட் சாண்டர்சன், சென்னை இந்திய தொழில்நுட்பக்கழகத்தின் இயக்குநர் திரு. காமகோடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிறைவு விழாவில் மதுரை மற்றும் திருச்சியில் மண்டலப் புத்தாக்க மையங்கள் உருவாக்குதல் மற்றும் 26 பொறியியல் கல்லூரிகளுடன் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் JIGSAW புத்தாக்க இணையதளத்தைத் தொடங்கி வைத்து விழாச் சிறப்புரையாற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in